# மதுரமங்கலம் இலவச காவலர் பயிற்சி மையம்

## மாதிரி தேர்வு – 3

## வரலாறு ☺ உளவியல்

நேரம் : 80 Min

வினாக்கள்: 80 தொடர்புக்கு: 8754820794

1. சங்கம் என்ற சொல்லின் பொருள் என்ன?

அ. குழு ஆ. கழகம் இ. கூட்டம் ஈ. கட்சி

2. கீழ்க்கண்டவற்றுள் உயர்தனிச்செம்மொழி எது?

அ. மலையாளம் ஆ. கன்னடம் இ. தெலுங்கு ஈ. தமிழ்

3. லெமூரியா என்பதன் பொருள்?

அ. மனிதன் ஆ. நாய் இ. குரங்கு ஈ. குதிரை

4. சமண சமயத்திற்கு உறுதியான அமைப்பை தந்தவர் யார்?

அ. ஆதிநாதர் ஆ. ரிஷபதேவர் இ. நேமிநாதர் ஈ. மகாவீரர்

5. சமண சமயம் மிகவும் வலியுறுத்திய கொள்கை?

அ. உருவ வழிபாடு ஆ. கொல்லாமை

இ. தீண்டாமை ஈ. பாவச்செயல்

6. இரும்பு + குரோமியம் = ?

அ. வெண்கலம் ஆ. பித்தளை இ. எஃகு ஈ. சில்வர்

7. கடந்த கால உண்மைகளை அறிய எதை படிக்க வேண்டும்?

அ. புவியியல் ஆ. தொல்லியல் இ. வரலாறு ஈ. சமூகவியல்

8. டெரகோட்டா என்பது என்ன?

அ. சுடுமண்பாண்டம் ஆ. சுட்ட செங்கற்கள்

இ. வெண்கலச்சிலை ஈ. வீடு

9. ராவி நதிக்கரை காணப்படும் இடம்?

அ. லோத்தல் ஆ. ராஜஸ்தான் இ. மத்தியப்பிரதேசம் ஈ. பஞ்சாப்

10. வைசாலியில் 2வது புத்தசமய மாநாட்டை நடத்தியவர் யார்?

அ. காலசோகன் ஆ. அஜாதசத்ரு இ. பிம்பிசாரர் ஈ. அசோகர்

11. சந்திரகுப்த மௌரியரின் அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு?

அ. 2005 ஆ. 2002 இ. 2000 ஈ. 2001

12. "இரண்டாம் அசோகர்" என்றழைக்கப்படுபவர் யார்?

அ. கனிஷ்கர் ஆ. அர்சர் இ. ஷெர்ஷா ஈ. சந்திரகுப்தர்

13. "இந்திய கிளி" என அழைக்கப்படுபவர் யார்?

அ. அல்பெருனி ஆ. கைகுபாத் இ. அமீர் குஸ்ரு ஈ. இல்துமிஷ்

14. அலாவுதீன் கில்ஜி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

அ. கடவுளின் பிரதிநிதி ஆ. கருணை உள்ளம் கொண்டவர்

இ. ஜலாலுதீன் ஈ. கடவுளின் குழந்தை

15. முகமது கஜினி எந்த ஆண்டில் சோமநாதபுரத்தின் மீது படையெடுத்தார்?

அ. கி.பி.1025 ஆ. கி.பி.1027 இ. கி.பி.1001 ஈ.கி.பி.1010

16. "இந்திய வரலாறு" எனும் நூலை இயற்றியவர் யார்?

அ. முகமது கஜினி ஆ. சர் என்றி எலியட்

இ. முகமது கோரி ஈ. முகமது பின் காசிம்

17. “லாக்பாக்ஷா” என அழைக்கப்பட்டவர் யார்?

அ. குத்புதீன் ஐபக் ஆ. இல்துமிஷ் இ. இரசியா ஈ. பால்பன்

18. பிரகதீஸ்வரர் ஆலயம் காணப்படும் இட்ம?

அ. திருச்சி ஆ. ஸ்ரீரங்கம் இ. தஞ்சாவூர் ஈ. மதுரை

19. சித்திரகாரப்புலி என்றழைக்கப்பட்டவர் யார்?

அ. முதலாம் பராந்தகன் ஆ. முதலாம் ராஜராஜசோழன்

இ. முதலாம் இராசேந்திரன் ஈ. முதலாம் மகேந்திரவர்மன்

20. களப்பிரர்களை வீழ்த்தி, பல்லவ ஆட்சியை தொண்டை மண்டலத்தில் தொடங்கி வைத்தவர் யார்?

அ. சிம்மவிஷ்ணு ஆ. முதலாம் மகேந்திரவர்மன்

இ. இரண்டாம் நரசிம்மவர்மன் ஈ. ராஜராஜசோழன்

21. சித்தன்னவாசல் ஓவியம் யாருடைய காலத்தை சார்ந்தது?

அ. சேரர்கள் ஆ. பாண்டியர்கள் இ. சோழர்கள் ஈ.பல்லவர்கள்

22. பல்லவ அரசர்களின் தலைநகரம் எது?

அ. மதுரை ஆ. தஞ்சாவூர் இ. வஞ்சி ஈ. காஞ்சிபுரம்

23. குஷாண வம்சத்தின் தலைசிறந்த மன்னர் யார்?

அ. அசோகர் ஆ. அர்ஷர் இ. அரிசேனர் ஈ. கனிஷ்கர்

24. நாளந்தா பல்கலைக்கழகம் யாருடைய காலத்தில் வளர்ச்சி பெற்றது?

அ. சமுத்திரகுப்தர் ஆ. குமாரகுப்தர் இ. சந்திரகுப்தர் ஈ. அசோகர்

25. நான்காவது புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம் எது?

அ. ராஜபுத்திரம் ஆ. வைசாலி இ. காஷ்மீர் ஈ. பாடலிபுத்திரம்

26. கீழ்க்கண்டவற்றுள் அசுவகோஷர் எழுதிய நூல் எது?

அ. அர்ஷசரிதம் ஆ. பிரியதர்ஷிகா இ. ரத்னாவளி ஈ. புத்தசரிதம்

27. சி-யு-கி என்னும் பயண நூலை இயற்றிய பௌத்த துறவி யார்?

அ. யுவான் சுவாங் ஆ. மெகஸ்தனிஸ் இ. பாணர் ஈ. பாகியான்

28. பாண்டிய பேரரசு ஆனது, பாண்டிய......... என அழைக்கப்பட்டடது?

அ. மண்டலம் ஆ. வளநாடு இ. ஊர் அவை ஈ. பாளையம்

29. முதலாம் நரசிம்மவர்மனின் பட்டப்பெயர் என்ன?

அ. வாதாபி கொண்டான் ஆ. ஜெயம் கொண்டான்

இ. கடாரம் கொண்டான் ஈ. மதுரை கொண்டான்

30. தமிழ்நாட்டில் சமணச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுள் ஒன்று கீழ்க்கண்டவற்றுள் எது?

அ. சிர்ணார் ஆ. கழுகுமலை இ. அதிகும்பா ஈ. மதுரை

31. புத்தர் அறிவுணர்வு பெற்ற இடம் எது?

அ. குந்த கிராமம் ஆ. மான்பூங்கா இ. கயா ஈ. ஆலமரம்

32. புத்த சமயத்தை பின்பற்றிய அரசர்களுள் முக்கியமானவர் யார்?

அ. சந்திர குப்தர் ஆ. அசோகர் இ. பிந்துசாரர் ஈ. கனிஷ்கர்

33. மிகத் தொன்மையான காலத்தை ஆய்ந்தறிய...... படிக்க வேண்டும்?

அ. வரலாறு ஆ. காலசுவடுகள்

இ. கல்வெட்டுகள் ஈ. அகழ்வாராய்ச்சி

34. 2004-ல் அகழ்வாராய்ச்சி பணியில் ஒரே இடத்தில் 160க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

அ. திருநெல்வேலி ஆ. தூத்துக்குடி

இ. ஆதிச்சநல்லூர் ஈ. பிம்பேட்கா

35. தொல்பழங்காலம் என்பது பழங்காலத்திற்கு.......

அ. பிற்பட்ட காலம் ஆ. முற்பட்ட காலம்

இ. பழைய கற்காலம் ஈ. புதிய கற்காலம்

36. பல கிராமங்கள் இணைந்தது

அ. கிராமம் ஆ. ஜனா இ. விஸ் ஈ. மகாஜனபதம்

37. வாஜ்பேயம் என்பது

அ. குதிரை பந்தயம் ஆ. முடிசூட்டுவிழா

இ. தேர்போட்டி ஈ. போர் முறை

38. ருத்திரன் என்பதன் பொருள் என்ன?

அ. சிவன் ஆ. பிரம்மன் இ. விஷ்ணு ஈ. இந்திரன்

39. ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும்பகுதியை எவ்வாறு அழைத்தனர்?

அ. மதராஸப்பட்டினம் ஆ. தமிழ்நாடு

இ. தென்பகுதி ஈ. சென்னை மாகாணம்

40. சோழர்களின் துறைமுகம் எது?

அ. உறையூர் ஆ. வஞ்சி இ. முசிறி ஈ. காவிரிபூம்பட்டினம்

41. சேரர்களின் கொடி எது?

அ. புலி ஆ. மீன் இ. வில் அம்பு ஈ. நந்தி

42. 2000 ஆண்டுகளுக்கு முன் ஈழத்தை வென்றவன் யார்?

அ. கிள்ளிவளவன் ஆ. இராசேந்திர சோழன்

இ. கரிகாலசோழன் ஈ. இராஜராஜசோழன்

43. “யானோ அரசன், யானே கள்வன்” என்று கூறிய அரசன் யார்?

அ. முடத்திருமாறன்

ஆ. தலையாலங்கணத்து செருவென்ற நெடுஞ்செழியன்

இ. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

ஈ. பாண்டியன் நெடுஞ்செழியன்

44. நிஷ்கா என்ற தங்க நாணயம் எந்த காலத்தைச் சார்ந்தது?

அ. புதிய கற்காலம் ஆ. பிற்பட்ட வேதகாலம்

இ. ரிக் வேதகாலம் ஈ. இரும்பு காலம்

45. காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ. குறிஞ்சி ஆ. மருதம் இ. முல்லை ஈ. நெய்தல்

46. புத்தர் பிறந்த இடம் எது?

அ. குந்த கிராமம் ஆ. வைசாலி நகரம்

இ. பீகார் ஈ. லும்பினிவனம்

47. கோமதீஸ்வரர் சிற்பம் உள்ள இடம் எது?

அ. மவுண்ட் அபு ஆ. தில்வாரா கோயில்

இ. சிரவணபெலகொலா ஈ. கஜிராகோ

48. இடைச்சங்கம் நடைபெற்ற இடம் எது?

அ. தென்மதுரை ஆ.தற்போதைய மதுரை இ. மூதூர் ஈ. கபாடபுரம்

49. இந்தியாவின் நெப்போலியன் என்றழைக்கப்படுபவர் யார்?

அ. குமாரகுப்தர் ஆ. சந்திரகுப்தர் இ. அசோகர் ஈ. சமுத்திரகுப்தர்

50. சோழர்களின் நிர்வாக முறையை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?

அ. குடுமியான் மலை கல்வெட்டு ஆ. சின்னமனூர் செப்பேடு

இ. உத்திரமேரூர் கல்வெட்டு ஈ. திருநாதர் குன்றம் கல்வெட்டு

51. **DOCUMENT** என்பதை **ODUCEMTN** என எழுதினால் **EMPLOYEE** எவ்வாறு எழுதப்படும்?

அ. **MELPOYEE** ஆ. **MELPYOEE**

இ. **MEPLYOEE** ஈ. **MLEPOYEE**

**52. 8,7,11,12,14,17,17,22,….., அடுத்த எண் என்ன?**

அ. **27** ஆ. **20** இ. **22** ஈ. **24**

**53.** ஒரு மொழியில் **LOVE** என்ற வார்த்தையை 27 என்ற எண்ணால் எழுதினால் **COME** என்ற வார்த்தையை எவ்வாறு எழுதலாம்?

அ. 38 ஆ. 18 இ. 28 ஈ. 08

54. நீ சாலையின் வழியே சென்று கொண்டிருக்கும் போது ஒரு பெண்ணின் பர்சைக் கண்டெடுக்கிறாய், அதில் ஆயிரம் ரூபாய் பணம் இருப்பதைக் காண்கிறாய் எனில், நீ என்ன செய்வாய்?

அ. பர்சை எடுத்துக்கொண்டு சென்று விடுவேன்

ஆ. பணத்தை எடுத்துக்கொண்டு பர்சைத் தூக்கி எறிவேன்

இ. அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைப்பேன்

ஈ. அங்கேயே நின்று கொண்டு அதன் உரிமையாளர் பர்சைத் தேடுகிறார்களா எனக் காத்திருப்பேன்

55. **a…ba…b…b…a…b**

அ. **aabba** ஆ. **abaab** இ. **abbab** ஈ. **Bbabb**

**56.** ஒரு சங்கேத மொழியில் அறை என்பது படுக்கை எனவும், படுக்கை என்பது ஜன்னல் எனவும், ஜன்னல் என்பது பூ எனவும், பூ குளிர்சாதனம் எனக் கொண்டால், ஒருவன் எதில் உறங்குவான்?

அ. ஜன்னல் ஆ. படுக்கை இ. பூ ஈ. குளிர்சாதனம்

57. ஒரு மாதத்தின் முதல் நாள் வெள்ளிக்கிழமை எனில், அந்த மாதத்தின் 15-ஆம் நாள் என்ன கிழமை,?

அ. வியாழன் ஆ. வெள்ளி இ. சனி ஈ. ஞாயிறு

58. கிளி:கூண்டு:: மனிதன்: ?

அ. வீடு ஆ. வாழ்க்கை இ. சிறை ஈ. காடு

59. வேறுபட்ட எண்ணை கண்டுபிடி:

225, 289, 400, 36, 35

அ. 35 ஆ. 289 இ. 400 ஈ. 36

60. + என்பது ÷, ÷ என்பது ×, × என்பது -, என்றால்

8+40÷8 ×5= எவ்வளவு?

அ. 30 ஆ. 165 இ. 33 ஈ. 40

61. 3 மணி நேரத்தை ஒரு நாள் கணக்கில் எந்த விகிதாசாரத்தில் எழுதலாம்?

அ. 1:6 ஆ. 1:3 இ. 1:8 ஈ. 1:25

62. காவல் துறையினர் சீருடை அணிய காரணம்

அ. சீருடையை கண்டு திருடர்கள் அஞ்சுவார்கள்

ஆ. அரசு ஆணையிட்டதால்

இ. சீருடையில் கம்பீரமாக தோற்றம் அளிப்பதால்

ஈ. சீருடையில் அவர்களை மக்கள் சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்க முடிவதால்

63. 6, 11, 21, 36, 56, ……?

அ. 51 ஆ. 91 இ. 42 ஈ. 81

64. அருண் ஒரு பெண்ணை காட்டி இப்பெண் என் தாயாரின் பேரனுக்கு மனைவி என்றால் அருண் அப்பெண்ணுக்கு என்ன உறவு?

அ. கணவன் ஆ. மாமனார் இ. தகப்பனார் ஈ. எதுவுமில்லை

65. ஒன்று முதல் 10 வரை ஆங்கிலத்தில் எழுதினால் அவற்றுள் ‘E” என்ற எழுத்து எத்தனை முறை வரும்?

அ. 8 ஆ. 9 இ. 10 ஈ. 11

66. கீழ்க்கண்ட கேள்விக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் மிகவும் பொருத்தமானதை தேர்ந்தெடுக்கவும்.

ஒரு சிறையில் எப்பொழுதுமே இருக்க வேண்டியது?

அ. கம்பிகள் ஆ. கைதிகள் இ. காவல் அதிகாரி ஈ. பூட்டு

67. 17.00 மணி என்றால்

அ. 5 முற்பகல் ஆ. 5 பிற்பகல் இ. 7 பிற்பகல் ஈ. 7 முற்பகல்

68. தாமரை மலருக்கு எப்போதுமே இருக்க வேண்டியது?

அ. இதழ்கள் ஆ. மண் இ. வேர் ஈ. தண்ணீர்

69. எல்லா சிறைவாசிகளும் ஆண்கள், எந்த ஆணும் படிக்கவில்லை.

இந்த கூற்றின்படி, எந்த விடை சரியானது?

அ. எந்த சிறைவாசியும் படிக்கவில்லை

ஆ. பெண் சிறைவாசிகள் கிடையாது

இ. எல்லா சிறைவாசிகளும் பெண்கள்

ஈ. சில சிறைவாசிகள் படிக்கவில்லை

70. ஒரு நம்பரை யோசித்துக் கொள்ளுங்கள், அதை 4ஆல் வகுக்கவும்.

பின் 9யை அதனுடன் கூட்டவும். பதில் 15 எனில், அந்த நம்பர் என்ன?

அ. 20 ஆ. 22 இ. 24 ஈ. ஏதுமில்லை

71. வெட்ட வெளியில் நிற்கும் ஒருவனின் நிழல், மதியம் 12 மணியளவில், எந்த திசையில் நீண்டிருக்கும்?

அ. தெற்கு ஆ. வடக்கு இ. மேற்கு ஈ. ஏதுமில்லை

72.

| | | |
|---|---|---|
| 81 | 121 | 225 |
| 9 | 11 | 15 |
| 63 | ? | 105 |

அ. 77 ஆ. 68 இ. 54 ஈ. 52

73. வர்க்கமூலம் காண்க:

121, 784

அ. 11, 18 ஆ. 11, 26 இ. 11, 28 ஈ. 11, 24

74.



மேற்கண்ட படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

அ. 12 ஆ. 10 இ. 6 ஈ. 11

75. நிரப்புக.

**AA= 4 , BB= 16, CC= ?, DD= 64**

அ. 32 ஆ. 36 இ. 38 ஈ. 40

76. கீழ்க்கண்டவற்றுள் தவறான எண் கண்டுபிடி:

அ. 63, 7 ஆ. 28,4 இ. 35,5 ஈ.56,8

77. ஒளி : சூரியன் : : வெப்பம் :....?

அ. மின்சாரம் ஆ. நிலா இ. நெருப்பு ஈ. பனிக்கட்டி

**78. 6 : 24 : 5 : ...?**

அ. 23 ஆ. 22 இ. 26 ஈ. 20

79. வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:

அ. பிப்ரவரி ஆ. ஏப்ரல் இ. ஜூன் ஈ. ஆகஸ்ட்

80. X ன் மதிப்பு காண்க:

3 : 5 = 15 : X

அ. 25 ஆ. 20 இ. 10 ஈ. 5.

மதுராந்தகம் இலவச காவலர் பயிற்சி மையம்
கல்வி பசுமை
MPC
நல்லதோர் லட்சியம் வெல்வது நிச்சயம்

# மதுரமங்கலம் இலவச காவலர் பயிற்சி மையம்

## விடைத்தாள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |

நல்லதோர் லட்சியம்
வெல்வது நிச்சயம்

**நேரத்தை பயன்படுத்தியவன் தோற்றதும் இல்லை**

**நேரத்தை வீணாக்கியவன் வென்றதும் இல்லை**